பொது நிருவாக சுற்றறிக்கை : 06/2023

எனது இலக்கம் : EST-3/POLIC/04/0064
பொது நிருவாக,உள்நாட்டலுவல்கள்,
மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு
சுதந்திர சதுக்கம்
கொழும்பு 07.

2023.04.06

அமைச்சுக்களின் செயலாளர்கள்
மாகாண பிரதம செயலாளர்கள்
திணைக்களத் தலைவர்கள்

**உள்ளூராட்சி சபைத் தேர்தலில் போட்டியிட வேட்புமனுக்களை கையளித்துள்ள அரசியல் உரிமைகளை அனுபவிக்க உரித்துள்ள அரச உத்தியோகத்தர்களுக்கு சம்பளம் வழங்குதல்**

2023 உள்ளூராட்சி சபைத் தேர்தலில் போட்டியிடுவதற்காக வேட்புமனுக்களைக் கையளித்துள்ள அரசியல் உரிமைகளை அனுபவிக்கும் உரித்துடைய அரச உத்தியோகத்தர்களுக்கு பின்வருமாறு நிவாரணம் வழங்குவதற்கு 2023.04.03ஆந் திகதியன்று நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் முடிவெடுக்கப்பட்டுள்ளது.

02. அதன்படி, தாபன விதிக்கோவையின் XXXII ஆம் அத்தியாயத்தின் 2:3:2 ஆம் உபபிரிவின் ஏற்பாடுகளுக்கமைய 2023 உள்ளூராட்சி சபைத் தேர்தலுக்கான வேட்புமனுவைக் கையளித்து அத்தேர்தலில் போட்டியிட அரசியல் உரிமைகளை அனுபவிக்க உத்துடைய அரச உத்தியோகத்தர்களுக்கு, 2023.03.09 ஆந் திகதி முதல் 2023.04.25 ஆந் திகதி வரையான காலத்திற்கு சம்பளத்துடனான லீவாகக் கருதி உத்தியோகத்தர்களுக்கு அடிப்படைச் சம்பளத்தை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்.

03. உத்தியோகத்தர்களுக்கு தாபன விதிக்கோவையின் XXXII ஆம் அத்தியாயத்தின் 2:3:2 ஆம் உபபிரிவின் படி பெற முடியுமான லீவினைப் பதிலீடு செய்ததன் பின்னர் எஞ்சிய காலத்திற்கு மேற்படி சம்பளம் செலுத்த முடியும்.

04. இந்த ஏற்பாடுகள் 2023 உள்ளூராட்சிச் சபைத் தேர்தலுக்கு மாத்திரம் ஏற்புடையதாக்கிக் கொள்ளப்படும்.

ஒப்பம்./ கே.டீ.என். ரஞ்சித் அசோக
செயலாளர்
பொது நிருவாக, உள்நாட்டலுவல்கள்,
மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு

தொலைபேசி இலக்கம் : 0112-692159
தொலைநகல் இலக்கம் : 0112-692158
மின்னஞ்சல் முகவரி : ade-iii@pubad.gov.lk